
# இரட்சிப்பு

## RATCHIPPU

RATCHIPPU = SALVATION



Volume-13 | August-2023 | Issue-03

Price Rs.5-00 | Annual Subscription Rs.60/-

## இயக்குநர் கடிதம்...

From Mission Director's Desk




கிறிஸ்துவுக்குள் அன்பானவர்களே!

அனைவருக்கும் எங்கள் அன்பின் சுதந்திர தின நல்வாழ்த்துக்கள்.

நாட்டின் 77வது சுதந்திர தினத்தை (76th Anniversary) கொண்டாடும் இவ்வேளையில், இன வெறி-மதவெறி இயக்கங்களால் சூரையாடப்பட்டு, குடும்பத்தை இழந்து தவிக்கும் மணிப்பூர் பழங்குடியினருக்காக உரிமைக்குரல் எழுப்பிட நம்மை அர்ப்பணிப்போம். நாம் அனைவரும் உண்மை-நேர்மையுடனும் செயல்பட்டு நாட்டின் அரசியல்-சாசனம் மற்றும் சட்டதிட்டங்களின் நடுநிலையை மீட்க போராடுவதற்கு நம்மை அர்ப்பணிப்போம்.

இனவெறி, மதவெறி மற்றும் வன்முறை இயக்கங்களுக்கு துணைபோகும் ஒன்றிய-மாநில ஆட்சியாளர்கள் நடுநிலைக்குத் திரும்பிட கருத்துடன் ஜெபிப்போம். இந்திய மக்களின் சுதந் திரம் மற்றும் உரிமைகள் உறுதிசெய்யப்பட உழைத்திடுவோம். மதவாத மற்றும் பிரிவினை வாத சக்திகள் முற்றிலுமாக அழிக்கப்பட ஜெபிப்போம்.

'ஜெப-ஜன்னல்' ஜெப-நேரங்களில் (ஆக. 11, 18, 25) இணைந்து ஜெபிக்கவும், 'அனைவரும்-ஊழியத்தில்' - என்ற நமது கைபிரதி ஊழிய திட்டத்தில் இணையவும், இரட்சிப்பு வேதாகம போட்டிகளில் பங்குபெறவும் உங்களை அன்புடன் அழைக்கிறோம்.

'இரட்சிப்பு' பத்திரிக்கை ஊழியங்கள், கைப்பிரதி ஊழியங்கள், காணொலி-செய்தி ஊழியங் கள், வலைதள ஊழியங்கள் (www.ratchippu.in/ratchippu.in), புத்தக-வெளியீட்டு ஊழியங் கள், NMS-MISSIONARY ஊழியங்கள், திருச்சபை ஊழியங்கள் ஆகிய நமது அனைத்து ஊழியங்களுக்காகவும் ஜெபிப்போம். வேதாகமப் போட்டிக்கான பதில்கள், ஜெப-குறிப்புகள், அனுபவ சாட்சிகள் மற்றும் காணிக்கை அனுப்புவோர் ஊழிய இயக்குநரின் பெயருக்கு அனுப்புங்கள் (Online-வங்கி மற்றும் தொடர்பு விபரம்: பக்கம் 12-ல் தரப்பட்டுள்ளன).

கிருபை உங்களோடு இருப்பதாக. ஆமென்.

கிறிஸ்துவின் பணியில்
அருட்திரு. எஸ்.ஜே.டி. தர்மராஜா

---

**வேத-வரிகள்-152** **கலாத்தியர்-5:1**

# தமிழ் வேதாகமங்களின் ஒற்றுமைத் திரட்டு

### சத்திய வேதம் (ரேனியஸ்-1840)

ஆனபடியினாலே, நீங்கள் மறுபடியும் அடிமைத்தனத்தின் நுகத்தடிகளுக்குட்படாமல், கிறிஸ்து நமக்குண்டாக்கி நமக்கிருக்கிற சுயாதீனத்தின் நிலைமையிலே நிலை கொண்டிருப்பீர்களாக.

### பரிசுத்த வேதாகமம் (பவர்-1867)

ஆனபடியினாலே, நீங்கள் மறுபடியும் அடிமைத்தனத்தின் நுகத்துக்கு உட்படாமல், கிறிஸ்து நமக்கு உண்டாக்கி வைத்து நமக்கு இருக்கிற சுயாதீன நிலைமையிலே நிலை கொண்டிருங்கள்.

### திருவிவிலியம் (பொது-1995)

கிறிஸ்து அடிமைத்தனத்திலிருந்து விடுவித்து நமக்கு உரிமை வாழ்வை அளித்துள்ளார். அதில் நிலைத்தி ருங்கள். மீண்டும் அடிமைத்தளை என்னும் நுகத்தை உங்கள்மேல் ஏற்றுக்கொள்ளாதீர்கள்.

### பரிசுத்த பைபிள் (இ.ஆர்.வி-1998)

நமக்கு இப்போது சுதந்திரம் இருக்கிறது. கிறிஸ்து நம்மை சுதந்திரம் உள்ளவர்கள் ஆக்கினார். எனவே, உறுதியாய் நில்லுங்கள், மாறாதீர்கள். மீண்டும் அடிமை களாக மறுத்துவிடுங்கள்.

தேவசெய்தி...



அருட்திரு.த.வீ. தேவபுத்திரன்

# தந்தையிடமுள்ள தாயின் அன்பு

ஒருவனை அவன் தாய் தேற்றுவதுபோல், நான் உங்களைத் தேற்றுவேன். ஏசாயா–66:13

As one whom his mother comforteth, so will I comfort you. Isaiah-66:13

**Rev. T. Devaputhiran** M.A.,B.D.,Th.M

PRESBYTER IN CHARGE AND CHAIRMAN

CSI WESLEY CHURCH, EGMORE, CHENNAI-600 084, SOUTHINDIA

கிறிஸ்துவுக்குள் அன்பானவர்களே!

உங்கள் யாவரையும் இரட்சிப்பு பத்திரிக்கை வழியாக மீண்டும் சந்திப்பதிலும் வாழ்த்துவதிலும் மகிழ்ச்சி அடைகிறேன். எனக்கு இந்த வாய்ப்பை நல்கிய அருட்பணி. தர்மராஜா அவர்களையும் வாழ்த்துகிறேன் நன்றி தெரிவிக்கிறேன். ‘தந்தையிடம் உள்ள தாயின் அன்பு’ என்ற செம்பொருளை மையமாகக்கொண்டு திருமறையின் துணையுடன் சற்றுநேரம் தியானிப்போம்.

என்னை அதிசயத்தில் ஆழ்த்தின திருமறைப் பகுதிகள் பல உண்டு. அதில் ஒன்று, நமது பரமதந்தை, ‘எனக்கு தாயின் அன்பு உண்டு’ என்று கூறும் (ஏசாயா-66:13) இந்தப் பகுதியாகும்.

இரண்டு குழந்தைகளைப் பெற்றெடுத்த ஒரு பெண்மணி மரித்தபின் அவருடைய கணவர், மறுமணம் புரியாமல், தன் பிள்ளைகளுக்கு தந்தையாகவும் தாயாகவும் இருந்து அன்பு செலுத்தி பராமரித்து வளர்ப்பது போல் நம்மீது கடவுள் அன்பு செலுத்துகிறார் என ஒரு உதாரணமாகக் கூறலாம். அதாவது, ஒரே நபர் இருவித அன்பையும் காட்ட முடியும் என்பதுதான்.

இதனை உணர்த்தும் திருமறைப் பகுதிகளை முதலாவது பார்ப்போம்.

முதலாம் பகுதி ஏசாயா-66:12,13. ‘‘அப்பொழுது நீங்கள் முலைப்பால் குடிப்பீர்கள், இடுப்பில் வைத்துச் சுமக்கப்படுவீர்கள், முழங்காலில் வைத்துத் தாலாட்டப்படு வீர்கள். ஒரு தாய் தேற்றுவதுபோல் நான் உங்களைத் தேற்றுவேன்.

இரண்டாம் பகுதி ஓசியா-11:3,4. நான் எப்பிராயீமை கைபிடித்து நடக்கப் பழக்கி

னேன். அன்பின் கயிறுகளால் அவர்களை இழுத்தேன், அவர்கள் நுகத்தடியை எடுத்துப் போட்டு, அவர்கள் பட்சம்சாய்ந்து ஆகாரங்கொடுத்தேன்.

இவ்விரண்டு செயல்களிலும் கடவுள், தனக்குள் தாயின் அன்பு இருப்பதாகவும், ஒரு தாய் செய்வது போல் போஷிப்பது, இடுப்பில் வைத்து சுமப்பது, காலில் வைத்து தாலாட்டுவது, அழுகின்றபோது மடியில் அமரவைத்து ஆறுதல் வார்த்தை கள் சொல்லித் தேற்றுவது, கைபிடித்து நடக்க பழக்குவது, குழந்தையின் பக்கம் சாய்ந்து ஆகாரம் கொடுப்பது போன்ற அனைத்தையும் தான் செய்வதாக கடவுள் தெளிவுபடுத்துகிறார். இது நமக்கு ஆச்சரியமாக இருக்கிறதல்லவா?

இதே காரியத்தைச் சங்கீதக்காரரும், சங்-131:2ல் தன்னை ஒரு குழந்தையாகவும் கடவுளைத் தாயாகவும் கண்டு, ‘‘தாயின் பால்மறந்த குழந்தையைப் போல நான் என் ஆத்துமாவை அடக்கி அமரப் பண்ணினேன்’’ என்று விளக்குகிறார். இதன் பொருள், கடவுளை நான் பணம்-பொருள் தருவார் என்று தேடவில்லை, மாறாக, ஒரு தாயின் பிரசன்னத்தில் குழந்தை அமைதியாக இருப்பதுபோல், நான் கடவுளின் பிரசன்னம், பாதுகாப்பு, அரவணைப்பு எனக்கிருப்பதால் மன அமைதியோடு வாழ்கிறேன் எனக் கூறுகிறார்.

மேலும் என்னை ஆச்சரியத்தில் மூழ்கவைத்த, கடவுளே கூறிய, இரண்டு தாய்-பறவை உவமைகளை தியானிக்கும்படிக்கு உங்களோடு பகிர்ந்துகொள்கிறேன்.

முதல் உவமை, தாய்-கழுகு உவமை: உபா-32:11 (இ. சட்டம்), மற்றும் யாத்-19:4 (வி. பயணம்) ஆகிய வசனங்களில் வரும் தாய்க்கழுகு குஞ்சுகளுக்கு பறக்கக் கற்றுக் கொடுக்கும்போது கூட்டிலிருந்து குஞ்சைத் தள்ளிவிட்டு அதையே பர்த்துகொண்டிருக்கு மாம், குஞ்சு தத்தளிக்கும் போது அது தரையில் விழும்முன் தாய்க் கழுகு வேகமாக பறந்துவந்து குஞ்சுப்பறவையை தன் முதுகில் தாங்கி மீண்டும் உயர தூக்கிச் சென்று, மீண்டும் கீழே-தள்ளி பறக்க கற்றுக் கொடுக்கு மாம். குஞ்சு பறக்கமுடியாத பட்சத்தில் பாதுகாப்பான இடத்தில் கொண்டு சேர்க்குமாம். அதுபோல் நான் செய்கிறேன என கடவுள் கூறுகிறார்.

அடுத்த உவமை, தாய்-கோழி உவமை: லூக்-13:34ல் இயேசு, ஆபத்து சூழலில் குரல் கொடுத்து, தன் குஞ்சுகளைத் தன் இறக்கைக்குள் ஒளிந்து கொள்ள அழைக்கும் பெட்டைக் கோழியிடமுள்ள அந்தத் தாயின் அன்பு தன்னிடத்தில் (கடவுளிடத்தில்) இருப்ப தாகக் கூறுகிறார்.

இந்த இரண்டு உவமைகளும் நமது பரமதந்தையிடம் ஒரு தாயின் அன்பு உள்ளதைத் தெளிவுபடுத்துகின்றன அல்லவா? மேலும், சங்-22:9,10ல் ‘‘நீரே என்னைக் கர்ப்பத்தி லிருந்து எடுத்தவர். என் தாயின் முலைப்பாலை நான் உண்கையில் என்னை உம்முடைய பேரில் நம்பிக்கையாயிருக்கப்பண்ணினீர். கர்ப்பத்திலிருந்து வெளிப்பட்டபோதே உமது சார்பில் விழுந்தேன். நான் என் தாயின் வயிற்றில் இருந்தது முதல் நீர் என் தேவனா யிருக்கிறீர்.’’ என்று கூறுவதன்மூலம் கடவுளை ஒரு மருத்துவச்சியாகவும், சங்-123:2ல், ‘‘இதோ, வேலைக்காரரின் கண்கள் தங்கள் எஜமான்களின் கையையும், வேலைக்காரி

களின் கண்கள் தங்கள் எஜமாட்டியின் கையையும் நோக்கி இருக்குமாப்போல, எங்கள் தேவனாகிய கர்த்தரை எங்கள் கண்கள் நோக்கியிருக்கிறது.” என்று கூறி, கடவுளை எஜமான் மற்றும் எஜமானியாக உருவகப்படுத்தி கடவுளுடைய தாய்மையின் தியாக அன்பை திருமறை நமக்கு வெளிப்படுத்துகிறது.

எபிரேய மொழியில் ‘மனதுருக்கம்’ என்ற குணத்தை பொதுவாக தாய்மாருக்குப் பயன்படுத்துவார்களாம். குழந்தை கீழே விழுந்து அடிபட்டு அழும்போது தாய் ஓடிச் சென்று, தூக்கி, ஆறுதல்ப்படுத்துவது இந்த பண்பினால்தான். இப்பண்பே கடவுளுக்கு (இயேசு கிறிஸ்துவுக்கு) இருப்பதாக திருமறையில் பல இடங்களில் நாம் காண்கிறோம். உதாரணமாக, சங் 84:11, 78:38, 111:4, 112:4, 145:8 ஆகிய திருவசனங்கள் கடவுள் இரக்கம், மனவுருக்கம், நீடிய-சாந்தம், மிகுந்த கிருபை உடையவர், அவர் நமக்கு தீங்கு நேரிடுகிறபோது வருந்துகிறவர் என்றும், மத்-9:36, 15:32, 20:34, மாற்-1:41, 6:34, 14:14, லூக்-7:13, 10:33, 15:20 ஆகிய திருவசனங்கள் நமது ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து கிருபை, இரக்கம், மனவுருக்கம், சாந்தகுணம் உடையவர் என்றும் தெளிவாகத் தெரிவிக் கின்றன. இவ்வாறன, கடவுளின் தாய்-அன்பை உணர்ந்துகொள்ள அழைக்கப்படுகிறோம்.

அன்பானவர்களே! கடைசியாக ஒன்றைக் கூறி முடிக்க விரும்புகிறேன். கடவுளின் அன்பு என்பது ஒரு தாயின் அல்லது ஒரு தந்தையின் அன்பைவிடவும் மிகவும் சிறந்தது என்பதை யும் நாம் நினைவில் கொள்ளவேண்டும்.

‘‘என் தகப்பனும் தாயும் என்னைக் கைவிட்டா லும், கர்த்தர் என்னைச் சேர்த்துக்கொள்ளுவார்” (சங்-27:10),

‘‘ஸ்திரீயானவள் தன் கர்ப்பத்தின் பிள்ளைக்கு இரங்காமல், தன் பாலகனை மறப்பாளோ? அவர்கள் மறந்தாலும், நான் உன்னை மறப்பதில்லை.” (ஏசா-49:15) போன்ற திருவசனங்கள் வழியாய் நம் தாய் தந்தைகூட நம்மை மறக்கலாம் ஆனால் கடவுள் நம்மை மறக்கமாட்டார். ஆகவே, கடவுளின் அன்பு தாய்-தந்தை அன்பைவிட மேலானது என்பது தெளிவாகிறது.

இப்படிபட்ட கடவுளின் அன்பை விட்டு நம்மை இவ்வுலகில் எந்த சக்தியாலும் பிரிக்க முடியாது. இதையே ரோம-8-38,39, ‘‘மரணமானாலும், ஜீவனானாலும், தேவதூதர்களானா லும், அதிகாரங்களானாலும், வல்லமைகளானாலும், நிகழ் காரியங்களானாலும், வருங் காரியங்களானாலும், உயர்வானாலும், தாழ்வானா லும், வேறெந்த சிருஷ்டியானாலும் நம்முடைய கர்த்தராகிய கிறிஸ்து இயேசு விலுள்ள தேவனுடைய அன்பைவிட்டு நம்மைப் பிரிக்கமாட்டாது.” என்கிறது.

அன்பானவர்களே! கடவுளின் அன்பில் நிலைத்திருங்கள். கடவுளின் அன்பை அனுபவியுங்கள். கடவுளின் அன்பில் அதிகமதிகமாய் வளருங்கள். கிறிஸ்துவின் அன்பில் மகிழ்ந்திருங்கள். ஆண்டவர்தாமே உங்களவரையுடம் ஆசீர்வதித்துக் வழிநடத்துவாராக.

கிறிஸ்துவின் பணியில் உங்களுடன்
அருட்திரு. த.வீ. தேவபுத்திரன்

அருட்பணி. த.வீ. தேவபுத்திரன், ஆயர் மற்றும் குருசேகரத் தலைவர், சி.எஸ்.ஐ. வெஸ்லி ஆலயம் (சென்னைப் பேராயம்) எழும்பூர், சென்னை-84, தென்னிந்தியா.

வசன தியானம் - 143



அருட்திரு.தர்மராஜா

# பெற்ற சுதந்திரம் பேணிக் காப்போம்

## பறிபோகும் சுதந்திரம் போராடி மீட்போம்



வசன-தியானம்
கலா-5:1,13,18

நீங்கள் சுயாதீனத்திற்கு அழைக்கப்பட்டீர்கள். சுயாதீனத்தை உங்கள் மனம்போல் அநுபவியாமல், அன்பில் ஒருவருக்கொருவர் சேவைசெய்யுங்கள். நீங்கள் மறுபடியும் அடிமைத்தனம் அடையாத படிக்கு, கிறிஸ்து உண்டாக்கின சுயாதீன நிலையிலே நிலைகொண்டிருங்கள். நீங்கள் ஆவியினால் நடத்தப்படுவீர்களாயின் நியாயப் பிரமாணத்திற்குக் கீழ்ப்பட்டவர்களல்ல. கலாத்தியர்-5:13,1,18

77வது சுதந்திரதினத்தை (76th Anniversary) கொண்டாடும் இவ்வேளையில் மனதிலெழும் கேள்விகள் பல. அவற்றில் சில: 1. பெற்ற சுதந்திரம் நமக்கு நிலைத்ததா? 2. நம் தேசத்தில் நடப்பது ஜனநாயக ஆட்சியா அல்லது சர்வாதிகார ஆட்சியா? 3. நம் தேசம் வல்லரசாக மாறுகிறதா இல்லை வன்முறை-அரசாக மாறுகிறதா? இக்கட்டான இந்த காலகட்டத்தில் விசுவாசிகள் செயல்படவேண்டிய விதம் குறித்து சிந்திப்போம்.

1. அன்பின்-சேவை செய்து சுதந்திரத்தை பேணிக் காப்போம்: திருமறை சொல்கிறது: கிடைத்த சுதந்திரத்தை நீங்கள் உங்கள் மனம்போனபடி அனுப விக்க வேண்டாம். (கலா-5:13ந). பொருள்: உங்கள் இஷ்டம்போல், சுயநலத் துடன் வாழ்ந்து சுதந்திரத்தை வீணடிக்க வேண்டாம்? என்பதாகும். பல்வேறு இன, மொழி, மத சார்புள்ள மக்கள் வாழும் பன்முகத்தன்மையுள்ள நம் நாட்டில், நாம் ஒருவருக்கொருவர் விட்டுக்கொடுத்து மகிழ்வுடனும், ஒருவருக்கொரு வர் அன்புடனும், சேவை-மனப்பான்மையுடனும், ஒற்றுமையுடனும் வாழ திருமறை (கலா-5:13பி) நம்மை அழைக்கிறது. பெற்ற சுதந்திரம் நிலைக்க அன்பு, சேவை ஒற்றுமை மிக மிக அவசியம் என்பதை மறந்துபோக வேண்டாம்.

2. மீண்டும் அடிமைத்தனம் அடையாதபடி போராடுவோம்? திருமறை சொல்கிறது: (கலா-5:1): நீங்கள் மீண்டும் அடிமைத்தன நுகத்துக்கு உட்படாதபடி கிறிஸ்து உண்டாக்கிய சுயாதீனத்தில் (கிடைத்த சுதந்திரத்தில்) நிலைத்திருங்கள். இதன் பொருள்: நீங்கள் போராடிப்பெற்ற (கிறிஸ்து போராடிச் சம்பாதித்த) சுதந்திரத்தை இழந்து, மீண்டும் பாவ-சாப, ஆதிக்க, மத-இனவாத சக்திகளுக்கு அடிமைப்படாதபடிக்கு நம்பிக்கையில் மகிழ்ச்சியாயும், உபத்திரவத்தில் பொறுமை யாயும், ஜெபத்தில் உறுதியாயும் போராடுங்கள் என்பதாகும் (ரோம-12:12).

நாம் உண்மை-நேர்மையாய் வாழும்போது எல்லா சட்டதிட்டங்களையும் நியாயப்பிரமாணங்களையும் கீழ்ப்படுத்தவும் இயேசுவைப் போல் அவற்றை நோக்கிச் சவால் விடவும் நம்மால் முடியும் என திருமறை சொல்லுகிறது (கலா-5:18, எபே-2:15). சட்டதிட்டங்கள் நமக்குச் சேதம் விளைவிக்காது, நாம் பெற்ற சுதந்திரத்தைப் பேணிக் காக்கவும் பறிபோகும் சுதந்திரத்தை போராடி மீட்கவும் கடவுள்தாமே அருள் புரிவாராக. ஆமென்.

அருட்திரு. எஸ.ஜே.டி. தர்மராஜா, ஊழிய-இயக்குநர், நற்செய்தி வேதாகம அச்சுப்பதிவு மற்றும் இரட்சிப்பு ஊழியங்கள், சாலிகிராமம், சென்னை-93, தென்னிந்தியா.

# நற்செய்தி வேதாகம அச்சுப்பதிவு ஊழியங்கள்
## Good Tidings Bible-Prints Ministries
### (GOOD SEEDS - எமது கைப்பிரதிகள் - நல்ல விதைகள்)

கிறிஸ்துவுக்குள் அன்பானவர்களே! சுவிசேஷ ஊழியங்களின் பயன்பாட்டுக்காக 20-வகையான கைப்பிரதிகளை வெளியிட்டு அவற்றை கிறிஸ்துவை அறியாத மக்களுக்கு விநியோகம் செய்து வருகிறோம் மட்டுமல்ல சுவிசேஷ ஊழியம் செய்யும் அன்பர்களுக்கும் திருச்சபைகளுக்கும் கைபிரதிகளை இலவசமாய் வழங்கி வருகிறோம். ஒரு வகை கைப்பிரதியை வெளியிட ஆகும் செலவு ரூ.4000/- மட்டும். கைப்பிரதிகளை Sponsor செய்து இயேசுவின் அன்பை அனைத்து மக்களும் அறிந்திட உதவிடுங்கள். Sponsor செய்ய விரும்பும் அன்பர்கள் நமது ஊழிய இயக்குநரை தொடர்பு கொள்ளும் படி அன்புடன் வேண்டிக்கொள்கிறோம்.

| No.&Title of the Tract | Sponsor's Name |
| --- | --- |
| 1. மைனாவின் கதை - The story of Myna | - Rev. S.J.D. Dharmaraj, Che-93 |
| 2. வக்கீல் நீதிபதியானார் - Counsel became Judge | - Mr.T. David Manohar, Che-93 |
| 3. மாட்டு உண்ணி - The Cattle Tick | - Mr.R.G. Sutharsingh, Che-93 |
| 4. கர்வமான காகிதப்பட்டம் - The Envious Kite | - Mrs. Rani Samuelraj, Che-93 |
| 5. டிரைவர் இல்லாத ரயில் - A Train without Driver | - Mr. Prasad Samuel, Cud-6 |
| 6. சீரழிக்கும் சீமைக்கருவை - Acacia of fence | - Mr.P.H. Jaychandran, Che-93 |
| 7. குடிநீர் குழாயில் குண்டுத்தவளை - Frog in tap | - Mr.R.C.P. Nixon, Che-93 |
| 8. இளவரசனும் கைதியும் - Prince and the Convict | - Mr.J. Albert, Kumbakonam |
| 9. கடலில் கல்லறைத் தோட்டம் - Bermuda Triangle | - Mr.C. James, Sirkali |
| 10. பற்றியெரியும் மனிதர்கள் - Human Combustion | - Mr.S. Nixon Everbright, AP |
| 11. டைட்டானிக் கப்பல் - The Titanic Ship | - Dr. Sharmila Selvaraj, Cud-1 |
| 12. நாக்குப்பூச்சி - The Tape Worm | - Mr. Arthur Masilamani, Che-7 |
| 13. அதிசய சொட்டு மருந்து - Miracle Drops | - Rev. S.J.D. Dharmaraj, Ch-93 |
| 14. எரியும் முன் எச்சரிக்கை - Warning before death | -Mr.A. Santharaj, Kumbakonam |
| 15. பிணக்குவியலில் இருந்து - From pile of Corpses | - Mr. S.J.P. Raja, Che-126 |
| 16. வெந்நீரில் தவளை - The Frog Experiment | - Mrs. Stella David, Tuticorine |
| 17. கன்கார்டு விமானம் - The Concord Aircraft | - Mr.B. Wilson, Che-92 |
| 18. ஜீன் வால் ஜீன் - Jean Valjean | - Mr. Samson Abraham, Che-93 |
| 19. பெர்லின் சுவர் - The Berlin Wall | - Mr.A. Inbaraj, Kumbakonam |
| 20. மாணக்கின் சாலை - El Camino de la Muerte | - Mr. Frankline Christus, Ch-93 |

கைப்பிரதிகளை Sponsor செய்த தேவபிள்ளைகளுக்கு எங்கள் நன்றி. கைப்பிரதிகளை எங்களிடம் இலவசமாகப் பெற்று உங்கள் ஊழியங்களில் பயன்படுத்தும்படி அன்புடன் வேண்டுகிறோம். கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பாராக. ஆமேன்.

வேத ஆராய்ச்சி - 75



Rev. Dr. D. சுரேஷ் ராஜன்

# சங்கீதங்கள் கற்றுத்தரும் விலையேறப்பெற்ற சத்தியங்கள்

Episode - 75

Author: Rev. Dr. D. Suresh

**சங்கீதம் – 75**

முன்னுரை:- (இந்த தியானத்துக்கான வேதபகுதி இந்திய சமகால மொழி பெயர்ப்பு வேதாகமத்திலிருந்து கையாளப்பட்டுள்ளது)

இந்த சங்கீதம், 'அழிக்காதே' என்ற இசையில் வாசிக்கும்படிக்கு பாடகர்குழு தலைவருக்கு ஒப்புவிக்கப்பட்ட ஆசாபின் சங்கீதம் என தலையங்கம் பெற்றுள்ளது. இந்த சங்கீதத்தின் கருப்பொருள் 'நீதி' அல்லது 'நியாயம்' என்பதாகும்.

நீதி என்ன விலை? நியாயம் எங்கு கிடைக்கும் என்று மக்கள் கேட்கும் ஒரு காலத்தில் நாம் வாழ்ந்து வருகிறோம். நமது குடும்பங்களில், சமுதாயத்தில், ஏன்? அனைத்துத் திருச்சபைகளிலுங்கூட நீதி, நியாயம் காணப்படாத சூழ்நிலை களில் நாம் வாழ்ந்து வருகிறேம்.

1. நன்றி படைத்தல்:- (வச:1, 9)

இறைவனே, உமக்கு நன்றி செலுத்துகிறோம். உமது பெயர் எங்களுக்குச் சமீபமாய் இருப்பதனால் நாங்கள் உமக்கு நன்றி செலுத்துகிறோம். மனிதர் உமது அதிசயமான செயல்களைப்பற்றிக் கூறுகிறார்கள் (வசனம்-1). முதலாம் வசனத்தில் காண்பதுபோல, நாம் அனைவருமாகச் சேர்ந்து கடவுளுக்கு நன்றி செலுத்த வேண்டும் என்பது இங்கு தெளிவாக எடுத்துரைக்கப்படுகிறது. இறைவனுடைய ஆச்சரியமான செயல்கள் மனுக்குலத்திலுள்ள அனைத்து மக்களாலும் அறிவிக்கப்படுகிறது.

இவ்வுலக வாழ்வில் நாம் அனுபவிக்கும் காற்று, தண்ணீர், வெப்பம், குளிர்ச்சி, வெளிச்சம், ஓசை ஆகியவற்றின் இயற்கை ஆதாரங்களான சூரியன், ஆறுகள், கடல்கள், மலைகள், மின்னல்கள், மேகங்கள், மழை, புயல் மற்றும் பருவநிலை மாற்றங்கள் போன்ற அனைத்து படைப்புகளின் மூலமாகவும் ஆண்டவர் அறியப்படுகிறார். ஆகவே, இறைவனின் அற்புதமான செயல்களைக் காண்கின்ற ஒவ்வொருவரும் அவருக்கு நன்றிப் பலிகளை படையலாக்க வேண்டும் (வசனம்-9).

2. நியாயாதிபதி:- (வச:2, 5)

இறைவன் ஒருவரே நியாயாதிபதி என்பதை இச்சங்கீதத்தில் திரும்பத் திரும்ப வலியுறுத்து

கிறார் இச்சங்கீதத்தின் ஆசிரியரான ஆசாப். கடவுளுடைய நியாயம் நிச்சயமாக விளங்கும் (வசனம்-2). இறைவனுக்கு விரோதமாகச் செயல்படும் கொடியவர்களின் வாழ்வு செழிப்பதில்லை. அப்படிப்பட்ட தீய மனிதர்களைப் பார்த்து, ‘‘உங்கள் கொம்பை வானங்களுக்கு விரோதமாக உயர்த்தாதிருங்கள், தலைக்கனம் உடையவர்களாய் பேசாதிருங்கள்’’ (வசனம்-5) என்று இறைவன் கூறுவதை இங்கு பார்க்கிறோம்.

மேலும், ‘‘யேகோவாவினுடைய கரத்தில் ‘காரசாரமாக நுரைக்கின்ற’ நியாயத்தீர்ப்பு என்னும் திராட்சை இரசம் நிறைந்த ஒரு கிண்ணம் இருக்கிறது. கடவுள் அக்கிண்ணத்தி லிருந்து ஊற்றுகிறார். பூமியிலுள்ள கொடியவர்கள் அனைவரும் அந்த திராட்சை இரசத்தை கடைசிவரை விடாமல் குடிக்கிறார்கள்’’ (வசனம்-8) என்று கூறுவதன் மூலம், கடவுளுடைய நீதியுள்ள நியாயத்தீர்ப்பானது பொல்லாதவர்கள் அனைவர் மீதும் வரும் என்று கூறுவதைத் தெளிவாக இங்கு காண்கிறோம்.

3. நீதிமான்களின் ஆசீர்வாதம்:- (வச:10)

‘‘கொடியவர்களின் கொம்பாகிய பலத்தை நான் வெட்டிப்போடுவேன். ஆனால், நீதிமான் களின் கொம்பாகிய பலத்தை மேன்மேலும் உயர்த்துவேன்’’ என்று நமது ஆண்டவராகிய இறைவன் சொல்லுவதாக (வசனம்-10) இச்சங்கீதம் நிறைவடைகிறது. கடவுளுக்குப் பயந்து நீதி-நேர்மையாய் வாழ்பவர்களுக்கு அவர்களது வாழ்வில் துன்பம், துக்கம், தோல்வி, வறுமை, வியாதி, வேதனை என்று எந்தவித பிரச்சனைகள் வந்தாலும், இறைவன் அவர்களுக்கு உதவிசெய்து அவர்களை உயர்த்துவார். ஆனால், ஆண்டவ ருக்கு அஞ்சி நடவாதவர்களோ, அவரது நியாயத்தீர்ப்புக்கு உட்பட்டவர்களாய் மிகுந்த துயரடைவார்கள் என்பதில் எந்த சந்தேகமும் இல்லை. ‘‘துன்மார்க்கர் நியாயத்தீர்ப்பிலும், பாவிகள் நீதிமான்களின் சபையிலும் நிலைநிற்பதில்லை.’’ (சங்கீதம்-1:5)

முடிவுரை:-

கிறிஸ்துவுக்குள் எனக்கு அன்பான இறைமக்களே! இறைவனுக்கு அஞ்சி, நீதி யோடும் நியாயத்தோடும் வாழ்வதே ஒரு முழுமையான வாழ்வு (நிறைவாழ்வு). துன்மார்க்கர், தங்கள் மனம்போனபடி வாழ்ந்து செழிப்பாய் இருப்பதைப்போல் காணப்படலாம்.

ஆனாலும், ஆண்டவருடைய பிள்ளைகள் ஆசீர்வதிக்கப்படுவதையும் பொல்லாதவர் களாகிய துரோகிகள் தேவனால் தண்டிக்கப்படுவதையும் திருமறையில் பல இடங்களில் நாம் காண முடியும். கர்த்தர் நீதிமான்களின் வழியை அறிந்திருக்கிறார்; துன்மார்க்கரின் வழியோ அழியும். (சங்கீதம்-1:6).

எனவே, பிரியமானவர்களே, நாம் கர்த்தருடைய மார்க்கத்தாராய் அவருடைய வழிகளில் நடந்து, அவருடைய நியாயத்தீர்ப்பு நாளில் வெட்கப்படாதவர்களாயும், தேவனுடைய ஆசீர்வாதங்களைச் சுதந்தரித்துக்கொண்டவர்களாயும் காணப்பட தேவன்தாமே நமக்கு கிருபை செய்வாராக. கர்த்தர்தாமே உங்களை ஆசீர்வதித்து வழிநடத்துவாராக. ஆமென்.

சங்கீதங்கள் கற்றுத்தரும் விலையேறப்பெற்ற சத்தியங்கள். தொடரும்...

AUTHOR: REV. DR. D. SURESH RAJAN, CO-FOUNDER, BIBLE TRANSLATION INITIATIVES, COIMBATORE, SOUTH INDIA
ஆசிரியர்: அருட்திரு. அறிவர். டி. சுரேஷ் ராஜன்,
இணை நிறுவனர், வேதாகம மொழிபெயர்ப்பு முயற்சிகள், கோயம்புத்தூர். தென்னிந்தியா.

# வேதாகம போட்டி-153 சரியான பதில் அளித்தோர்

1) அமலியா லோகநாதன் TVM
2) அமிர்தகனி CHE
3) அன்பு சுதந்திரம் TIN
4) ஏஞ்சல் சி. TIN
5) ஏஞ்சல் ராஜதுரை CHE
6) ஏஞ்சலின் பிரியா ஏ. TIN
7) ஏஞ்சலின் ரூஸ்வெல்ட் CHE
8) ஏஞ்சலின் வில்லியம்ஸ் CHE
9) அன்னாள் ஜெபக்கனி CBE
10) அனி பாய் ஜாண் TIN
11) அரோமா சாத்ராக் TIN
12) ஆர்தர் மாசில்லாமணி CHE
13) அருள்செல்வி VIR
14) அருள்செல்வி ஜாண்ஸன் TIN
15) பாமா மாதவன் KAL-AP
16) பெல்சி தங்கராஜ் CHE
17) பெனிட்டா பிராங்க்ளின் CHE
18) பெட்டி' பிரின்ஸ் CHE
19) பியூலா ஜேசுராஜன் PON
20) செலினா பென்சி வில்சன் DR, KUW
21) சந்திராபாய் மாசிலாமணி AVD
22) சந்திரா மேரி விஜயன் BAN
23) சந்திரலேகா KAL-AP
24) சந்திரா சாமுவேல் TIN
25) சார்லஸ் சாலோமோன் WG-CMR SHI
26) சார்லட் டேவிட் CHE
27) சித்ரா பெஞ்சமின் TVL
28) சிட்டி TR. TVL
29) கிறிஸ்டல் ஜாய் யோபு TPT
30) கிறிஸ்துதாஸ் GOP
31) கிறிஸ்டி ஆயிட்டஸ் MAR-TIN
32) கிறிஸ்டி ஞானராஜ் CHE
33) சிசிலி புஷ்பம் டேவிட் CHE
34) டெய்ஸி ஜெபதாஸ் TCY
35) டெய்ஸி சாம் TUT
36) டேனியல் தாமஸ் TIN
37) டேனிங் சொர்ணா ஜெஸ் TIN
38) டேவிட் ஜே.ஆர். CHE/CBE
39) டெல்வின் இம்மானுவேல் TPT
40) தேவமணி ஆபிரகாம் TUT
41) தேவநேசம் ராஜாசிங் CHE
42) டோராபாய் CHE
43) எலிசபெத் செல்லத்துரை CHE
44) எமிமாள் (ஜெஸிக்கா) MDU
45) எஸ்தர் D.R. TIN
46) எவாஞ்சலின் ஜோன்ஸ் DR. SLM
47) குளோரா BBC TEN
48) குளோரி ரவீந்திரன் TIN
49) ஞானம் ஜெபராஜ் TIN
50) ஞானம் பிலிப் CHE
51) ஞானராணி G. TVL
52) ஞானசெல்வி மோசஸ் CHE
53) கோல்டா ஜேசுபாதம் MUM
54) கிரேஸ் டேனி TEN
55) கிரேஸ் பிரின்ஸ் APM-TEN
56) கிரேஸ்லின் சாந்தி TIN
57) கிரேஸ் பொன்மணி ரெக்ஸ் CHE
58) கிரேஸி கிறிஸ்டோபர் CHE
59) கிரேஸியா ஜெயபால் CHE
60) கிரிசெல்டா செய்லர் CHE
61) ஹெலன் ஜான்சிராணி TIN
62) ஹெலென் ஜெனிபர் பாண்டியன் CHE
63) ஹெலன் திலக் TUT
64) ஹேமா அஜீத் CHE
65) ஹேமா கேப்ரியேல் BAN
66) ஹெப்சிபா அசரியா PONN
67) ஹெப்சிபா மங்களராஜ் TIN
68) ஹிம்லா ராஜகுமாரி CHE
69) இளவரசி ஜோபிதா CBE
70) இன்பவல்லி கலைச்செல்வன் MDU
71) இந்திரா கெத்ஸி டேவிட் TIN
72) ஜமீலா செல்வராஜ் CHE
73) ஜேன்ஸ் (ஜான்ஸி) ANI
74) ஜேன் தர்மராஜ் TIN
75) ஜான்ஸி சந்தியா MKM
76) ஜாஸ்மின் ஞானதாஸ் CHE
77) ஜெபா ஜெயராஜ் CHE
78) ஜெபக்குட்டி மோசஸ் TIN
79) ஜெபரஞ்சிதம் மெர்லின் TUT
80) ஜெபசீலி கிளின்டன் CHE
81) ஜெபா சீனி MAR TIN
82) ஜெபஸ்டின் G. TIN
83) ஜெமீலா நிக்ஸன் CHE
84) ஜெனித்தா செல்வின் TIN
85) ஜெனித்தா ஷெருபா ஞானவேல் DHA
86) ஜெனிட்டா ஹெலன் CBE
87) ஜெனிலா CHE
88) ஜென்ஸி ஞானேஷ் MKM-TIN
89) ஜெரின் ஸ்டீபன் CHE
90) ஜெஸி செல்லதுரை CBE
91) ஜெஸி ஜெயக்குமார் TIN
92) ஜெயா ஆல்பர்ட் KUM
93) ஜோனா ஸ்டீபன் AVD
94) ஜோஸ்பின் ஜெஸி CHE
95) ஜாய்ஸ் பாண்டியன் CHE
96) ஜூலியட் ஜெபா CHE
97) ஜூலியட் ஜெயக்குமார் TIN
98) கலையரசி செல்வராஜ் CHE
99) கஸ்தூரி எலியாஸ் TIN
100) கிங்ஸ்லி ரவிகுமார் CHE

...வேதாகம போட்டி-153 பதிலளித்தோர் தொடர்ச்சி

101) கிங்ஸ்லி தங்கமணி CHE
102) கோயில்பிள்ளை ஞானத்தாய் APM
103) லதா மைக்கேல்ராஜ் CHE
104) லீலா டேவிட் CHE
105) லீலா ஜெபராஜ் THA-MAH
106) லீலா ஜோஸப் CBE
107) லீனா எலிசபெத் TPT
108) லில்லி ஜாண்ஸன் CHE
109) லிஸி டென்சிங் TIN
110) மேபல் கிறிஸ்டியான் CHE
111) மல்லிகா ஜாய்ஸ் (ஜஸ்டினா) JAY
112) மல்லிகா V. CHE
113) மணிமேகலை ஜெயக்குமார் TIN
114) மனோகரம் தனராஜ் NAZ
115) மரிய பாப்பா CHE
116) மரியாள் ஜே.எஸ். TUT
117) மெஜிலா ஜோஷ்வா TUT
118) மெர்சிபா CBE
119) மெர்சி தனராஜ் CBE
120) மெர்சி ஃபுளோரா பாஸ்கர் VEL
121) மெரிட்டா ஜெயபாலன் TCY
122) மியூரியல் புஷ்பராஜ் CHE
123) நகோமி நிர்மலா CHE
124) நதியா லாரன்ஸ் TVR
125) நிக்ஸன் எவர்பிரைட் TIN
126) ஆலிவ் ஜெயபாலன் CBE
127) பாக்யபாய் ஆரோன் TIN
128) பமீலா எட்வின் KAN
129) பெர்சி பால் பொன்சிங் TUT
130) பிங்க்லின் தேவமலர் சந்தோஷ் CHE
131) பொன்மணி உத்தமசிங் NAZ
132) பிரபா ஐசக் TIN
133) பிரேமா பூபாலன் AVD
134) பிரேமா ஜானி PCM
135) பிரேமா ஸ்டாலின் CHE
136) பிரின்ஸ் தயாநிதி CHE
137) பிரின்ஸ்லின் ஷைனி APM-TEN
138) பிரிசில்லா தாஸ் CHE
139) பிரிஸ்கில்லாள் சசி CBE
140) பிரியா ராஜ்குமார் CHE
141) ரேச்சல் ஈஸ்டர் VEL
142) ராஜகுமாரி சன்னியாசிமுத்து TUT
143) ராஜபிரமீளா TPT
144) ராஜ்மேரி சார்லஸ் KER
145) ரமோலா அதிசயராஜ் TIN
146) ராணி ஃபுளோரா APM-TEN
147) ராணி பிரபாகர் TIN
148) ராணி சாமுவேல்ராஜ் CHE
149) ரத்னா டென்னிஸன் CBE
150) ரத்னாவதி பாண்டியன் CHE
151) ரெஜினா விக்டர் TIN
152) ரோஸ்லின் மார்கிரெட் CHE
153) ரோஸி ஸ்டீபன் CHE
154) ரூபவதி நோபிள் TIN
155) ரூத் ஜாண்ஸன் TIN
156) சலோமி மனோகர் DR. CHE
157) சம்பு ஜெயச்சந்திரன் MDU
158) சாமுவேல் டேவிட் TPT
159) சாரா பாலசிங் MDU
160) சரோஜினி எலிசபெத் CHE
161) செல்வ அமுதா ஜார்ஜ் CHE
162) செல்வ பென்ஸி ஆபேல் KOT-AP
163) செல்வராஜ் K. CBE
164) செல்வராணி ஆல்பர்ட் CHE
165) செல்வராணி G. CHE
166) செல்வி அமிர்தராஜ் TVR
167) ஷாலி எடிசன் CHE
168) சாந்தி ஆசேர் TIN
169) சாந்தி ஆல்பர்ட் PCT
170) சாந்தி ஜெயசீலன் CHE
171)) சாந்தி ரோஸ் CBE
172) ஷர்மிளா செல்வராஜ் DR. CUD
173) ஷீபா சாம்ஸன் CHE
174) ஷீலா G. PNR-TVL
175) ஷெரீன் ஜெபராஜ் PAN
176) சவுந்தரம் சாலமோன் CHE
177) ஸ்டெல்லா டேவிட் TUT
178) ஸ்டெல்லா கனகராஜ் CHE
179) சுகிர்தா ஆல்வின் CHE
180) சுகிர்தா சின்னதுரை TIN
181) சுஜாதா சாமுவேல் CHE
182) சுமித்ரா B. CHE
183) சுந்தரிபாய் TUT
184) சுசீலா தியோடர் TCY
185) சுவர்ணலதா அற்புதராஜ் CHE
186) தனசீலி ஞானராஜ் CHE
187) தாரா மாணிக்கம் CHE
188) தெல்மா ஸ்டேன்லி MDU
189) உமா குளோரி CHE
190) வனஜா ஹெர்பர்ட் TIN
191) வசந்தா அன்பன் TIN
192) வசந்தா சந்திரசேகர் CBE
193) வசந்தி கருணாகரன் CHE
194) வசந்தி வாசன் CHE
195) விஜயராணி A. CHE
196) விஜி டேனியல் CHE
197) விமலா ஜெயக்குமார் TUT
198) விண்ணரசி ரோஸ் CHE
199) வினோலியா வில்சன் VAN
200) வைலட் கிறிஸ்டோபர் TIN
201) வைலட் சைரஸ் CHE

PRAYER-WINDOW PRAYER-WINDOW

# ஜெப-ஜன்னல் ஜெப-ஜன்னல்

## ஜெப–ஜன்னல் ஜெப நேரங்கள் ஆகஸ்டு – 2023

| | |
|---|---|
| **ஜெப-ஜன்னல்-1 காலை-ஜெபம்** | நாள்: 11–08–2023 இரண்டாம் வெள்ளி<br>நேரம்: காலை 5முதல் 6மணி வரை. |
| **ஜெப-ஜன்னல்-2 மதிய-ஜெபம்** | நாள்: 18–08–2023 மூன்றாம் வெள்ளி<br>நேரம்: மதியம் 1முதல் 2மணி வரை. |
| **ஜெப-ஜன்னல்-3 இரவு-ஜெபம்** | நாள்: 25–08–2023 நான்காம் வெள்ளி<br>நேரம்: இரவு 8முதல் 10மணி வரை. |

பிரியமானவர்களே! இந்த ஜெப–ஜன்னல் ஜெப–நேரங்களில் தானி–6:10 வசனத்தின்படி **"தானியேல், மேலறையில் எருசலேம் தேவாலயத்திற்கு நேராய் பலகணிகள் திறந்திருக்க"** ஜெபித்ததைப்போல் நமது இயக்குநரும், ஜெப–ஜன்னல் ஜெப–வீரர்களும் ஆலயம் நோக்கி ஜெபிக்கவிருக்கிறார்கள். நீங்களும் இந்த நேரங்களில் உங்கள் ஆலயம் நோக்கி ஜெபிக்கும்படியாக அன்புடன் உங்களை வேண்டிக்கொள்கிறோம்.

## 2023 இந்தியா சுதந்திர தினம் – 76 YEARS – INDIA INDEPENDENCE DAY 2023

# இது மற்றொரு சுதந்திரப் போராட்டத்திற்கான நேரமா?

கல்பனா சர்மா, ஆசிரியர், எகனாமிக் அண்ட் பொலிட்டிகல் வீக்லி கட்டுரையிலிருந்து

இந்தியாவின் 77ம் சுதந்திரதினத்தைக் கொண்டாடுகிறோம். சுதந்திர இந்தியாவின் பயணத்தை 1947ல் பிறந்தவரான பத்திரிகையாளர் கல்பனா ஆய்வு செய்கிறார். ‘‘இந்தியாவின் விடுதலைக்கான அர்ப்பணிப்பு உறுதிமொழியை நாம் மீண்டும் புதிதாக எடுக்க வேண்டும்’’ என்கிறார் அவர்.

இன்று இந்தியாவில் பிரிவினைவாத-மதவாத-இனவாத அரசியல் நடந்துகொண்டிருக்கிறது. உலகில் எங்கும் காணமுடியாத அளவுக்கு இனவாத-மதவாத கலவரங்களும் படுகொலைகளும் நிகழ்த்தப் படுகின்றன. ஜனநாயகம், சர்வாதிகாரமாகவும் ஆகிவிட்ட நிலை. வல்லரசாக வேண்டிய இந்தியா வன்முறை அரசாகிய பரிதாப நிலைக்கு மக்கள் தள்ளப்பட்டுள்ளனர்.

நம் முன்னோர் கனவு கண்ட ‘இந்தியா’ இதுதானா? என்ற கேள்வி நமக்குள் எழுகிறது. ‘‘இந்திய ஆட்சியாளர்கள் சொல்லும் புதிய இந்தியாவிலிருந்து நம் முன்னோர்களின் ‘கனவு-இந்தியா’ முற்றிலும் வேறுபட்டதாகும்.’’ என்பது கல்பனா சர்மாவின் கருத்து.

இன்று மக்கள் ஏமாற்றத்திலும் விரக்தியிலும் உள்ளனர். ஆனால், இதை வெளிப்படுத்த வழி தெரியா மல் தவிக்கின்றனர். ‘‘காலாவதியான பழைய பிளவுகள் மற்றும் வெறுப்புகளை உயிருடன் வைத்திருப்பதால் நம் சுதந்திரத்தில் புதிதாக எதுவும் இல்லை. அத்தகைய நச்சு அடித்தளத்தில் புதிய இந்தியாவை உருவாக்கிவிட முடியாது. மண்ணின் மைந்தர்கள் மற்றொரு விடுதலை போருக்கு தயாராக வேண்டிய நிர்பந்தம் ஏற்பட்டுள்ளது.’’ என்கிறார் கல்பனா சர்மா.

# வேதாகம போட்டி-154

வேதபகுதி
யோவேல்-மீகா

ஓரிரு வார்த்தைகளில் பதிலளிக்கவேண்டும்

வேதவசன இருப்பிடமும் எழுதவேண்டும்

பதிலளிக்க
கடைசி நாள்
ஆகஸ்டு-25

1. யாருடைய கொம்புகள் இரும்பும், குளம்புகள் வெண்கலமும் ஆக்கப்படும்?
2. சீயோனை ரத்தப்பழியாலும், எருசலேமை அநியாயத்தாலும் கட்டுவிப்பவர்கள் யார்?
3. இதை விரும்புகிறவர்களுக்கு ஐயோ! வெளிச்சமில்லாத, அந்தகாரமான, இது என்ன?
4. பூமி-அதிர்ச்சிக்கு 2வருடம்-முன் இஸ்ரவேல் குறித்து தரிசனங்கண்டு சொன்னது யார்?
5. ‘நீ ஆமணக்கினிமித்தம் எரிச்சலாயிருக்கிறது நல்லதோ?’ - யார்? யாரிடம் சொன்னது?
6. ஆழி என்னை சூழ்ந்தது, கடற்பாசி என் தலையை சுற்றியது என ஜெபித்தது யார்?
7. எவைகள் தானியத்தால் நிரம்பும், எவைகளில் திராட்ரசம்-எண்ணெய் வழிந்தோடும்?
8. எதை நியாயந்தீர்க்க இரட்சகர்கள் சீயோன் பர்வதத்தில் வந்தேறுவார்கள்?
9. ‘நினிவே 3-நாள் பிரயாண விஸ்தாரமான மகா பெரிய நகரம்’ - சரியா, தவறா?
10. ‘விதையானது மண்கட்டிகளின்மேல் மக்கிப்போயிற்று’ - சரியா தவறா?
11. ‘நீங்கள் பிழைக்கும்படிக்கு நன்மையையல்ல தீமையை தேடுங்கள்’ - சரியா தவறா?
12. ‘மனுஷனுடைய சத்துருக்கள் அவன் வீட்டார்தானே!’ - சரியா தவறா?
13. ‘இது’ சங்காரம் போல, சர்வவல்லவரிடத்திலிருந்து வருகிறது:
அ) வாதை ஆ) கர்த்தரின்-நாள் இ) நியாயத்தீர்ப்பு ஈ) ஆக்கினை
14. பலசாலிகளுக்குள்ளே ‘இவன்’ அந்நாளிலே நிர்வாணியாய் ஓடிப்போவான்:
அ) பலவீனன் ஆ) தைரியவான் இ) சோம்பேறி ஈ) மூடன்
15. கிழக்கு வெளுக்கும் நேரத்தில் தேவன் ‘இதை’ கட்டளையிட்டார்:
அ) புழுதியை ஆ) புயலை இ) காற்றை ஈ) ஒரு பூச்சியை
16. யாக்கோபு வம்சம் என பேர் பெற்றவர்களே ‘இது’ குறுகியிருக்கிறதோ?
அ) ஆசீர்வாதம் ஆ) கர்த்தரின் கை இ) பெலன் ஈ) கர்த்தரின் ஆவி
17. கப்பற்காரர் போட்டார்கள், கண்டுபிடிக்க இதை போட்டார்கள்! குழப்பத்திலே போட்டார்கள் குலுக்கி குலுக்கி இதை போட்டார்கள்! ஆபத்திலே போட்டார்கள், அறிந்துகொள்ள இதை போட்டார்கள்! இவர்கள் போட்ட இதனை பின்னர் சேவகரும்-போட்டார்கள், சீஷர்களும் போட்டார்கள்! போட்டது என்ன?
18. காட்டுக்குள்ளே ராஜ-சிங்கம்! ஆட்டுக் கிடையில் குட்டி-சிங்கம்! சமவெளியில் பனிமழை! செடிகள்மீது சாரல் மழை! யார் இவர்கள்?
19. பானையில் சோறு-உண்டு ஆனால் பஞ்சம்! பாத்திரத்தில் நீர்-உண்டு ஆனால் பஞ்சம்! திரைகடல் ஒடி தேடிய திரவியம் உண்டு, ஆனால் ‘இதற்கு’ பஞ்சம்! தேசாதேசம் திரிந்து தேடியும் ‘இதற்கு’ பஞ்சம்! இது என்ன பஞ்சம்?
20. காலை நேரம் கட்டளை பெற்றேன்! கர்த்தரிடமே கட்டளை பெற்றேன்! காயும் வெயிலில் கடித்துத் தின்றேன்! அழியும் வரையில் அரித்துத் தின்றேன்! நான் யார்?

**பதில்களை அனுப்பவேண்டிய முகவரி ADDRESS FOR SENDING ANSWERS**

திருமதி. ஜெயசீலி தர்மராஜா, எஃப்–1, முதல் மாடி, பாரதி பிளாட்ஸ், எண்: 4/2-A, பாரதி தெரு, காந்தி நகர், சாலிகிராமம், சென்னை–93. வாட்ஸ்–அப்: 9789914463
Mrs. Jeyaseeli Dharmaraja, Flat: F-1, First floor, Bharathi flats, No: 4/2-A, Bharathi Street, Gandhinagar, Saligramam, Chennai-93.
E-mail: ratchippu@hotmail.com/sjddharmaraja@gmail.com. Whatsapp: 9789914463



சகோ. C. ஏஞ்சல்

# கர்த்தருடைய நாமங்களின் மகத்துவங்கள்

THE HIGHLY EXALTED HAA NAALAH MEODH

## நித்திய உடன்படிக்கையானவர்

EPISODE - 51 ஹா நாலாஹ் மியோத் பாகம் – 51

பூமியின் கேடகங்கள் தேவனுடையவைகள், அவர் மஹா உன்னதமானவர். சங்–47:9

The Shields of the earth belong unto God, He is greatly exalted. Psa 47:9

வானத்தையும் பூமியையும் நிரப்புகிற என்றைன்றைக்கும் உன்னதமானவராயிருக்கிறவரின் நாமத்தில் இரட்சிப்பின் விசுவாசிகளுக்கு சுதந்திர-தின வாழ்த்துக்கள்.

ஏசா-33:5 உன்னதத்தில் வாசமாயிருக்கிறவரே உம்மைத் துதிக்கிறோம்.

சங்-97:9 பூமி முழுவதற்கும் உன்னதமானவரே உம்மைப் போற்றுகிறோம்.

வெளி-15:3பி மகத்துவமும் ஆச்சரியமுமான உம் கிரியைகள் இந்தியாவில் வெளியரங்க மாய் வெளிப்படப்போவதற்காக உமக்கு ஸ்தோத்திரம். அல்லேலூயா.

சங்-107:10 உன்னதமானவரே உம் ஆலோசனைகளை வெளிப்படுத்தும், அவை களை நாங்கள் அசட்டைபண்ணாமல் உண்மையாய் கைக்கொள்வோம்.

ஏசா-32:15 உன்னதத்திலிருந்து நம் மீது ஆவி ஊற்றப்படுமட்டும் அப்படியே இருக்கும். அப்பொழுது வனாந்தரம் செழிப்பான வயல்வெளியாகும். ஆமேன்.

சங்-91:1 உன்னதமானவரின் மறைவு நமக்குக் கிடைக்கிறது. இதுவரை நம் வாழ்வில் அநீதி ஜெயித்து, பல காரியங்களில் நம்மை தலைநிமிர்ந்து நடக்க முடியாமல் செய்தது. ஆனால், பலவருட போராட்டத்துக்குப்பின் இன்றிலிருந்து உன்னதமானவரின் நீதியும் நியாயமுமான சிங்காசனம் நம் வாழ்வின் நடுவில் போடப்பட்டு அவர் நடுவராக அமர்ந்து அவரது வலதுகரம் நம்மீது நீட்டப்படுவ தால், இதுவரை நம்மைப் பாடாய்ப்படுத்தின லேகியோன் என்ற அசுத்த ஆவிகள் (மாற்-5:7-13) பாதாளத்தில் விழும்படி உன்னதமான வர் தம் வல்லமையை வெளியரங்கமாய் காணும்படி செய்கிறார். ஆமென்.

தானி:-7:18 உன்னதமானவரின் பரிசுத்தவான்கள் இராஜரீகத்தை பெற்று சதா காலமும் ராஜ்யத்தை சுதந்தரிப்பார்கள் என்ற வேத-வார்த்தையை இந்திய பாராளுமன்றம் மற்றும் 28மாநிலங்களில் நிறைவேற்றி, தமது பிள்ளைகளின் கொம்பை உயர்த்தப்போகிற உன்னதமானவருக்கு விசுவாச-நன்றி சொல்வோம்.

ஜெபம்: வானத்தையும் பூமியையும் உடையவராகிய உன்னதமான தேவனாகிய கர்த்தருக்கு நேராக எங்கள் கைகளை உயர்த்துகிறோம். உமது பிள்ளைகளாக ஞானமாய் நடந்து வாழ்வில் உயர்ந்திருக்க நீர் மேன்மையும் மஹா உன்னதமுமாய் எங்கள் வாழ்வின் அஸ்திபாரமாய் இருப்பீராக.

இயேசுவின் நாமத்தில், ஆமென் பிதாவே.

கிறிஸ்துவுக்குள் உங்கள் அன்பு சகோதரி
**C. Angel**

தொகுப்பு: சகோதரி. C. ஏஞ்சல் B.Sc, திருநெல்வேலி, தென்னிந்தியா

தேன்துளி வேதவசனக் கதை–147*. . .

# உலோபி எழுதிவைத்த உயில்



சகோ. அசரியா

சகோ. M. அசரியா ஞானதாஸ் M.A. M.Ed.

பல வருடங்களுக்கு முன், பிரான்ஸ் தேசத்தில் செல்வந்தனான மனிதன் ஒருவன் வாழ்ந்து வந்தான். ஏராளமான பணமிருந்தும் அவன் எளிமையாக ஒரு சிறு வீட்டில் வாழ்ந்து வந்தான். அவன் விலையுயர்ந்த உடை அணிந்துமில்லை, ஆடம்பரச் செலவு செய்ததுமில்லை, உறவினர் களை அழைத்து விருந்து அளித்ததும் இல்லை. மொத்தத்தில் அவன் மிகவும் சிக்கனமாக வாழ்ந்துவந்தான். ஆனால், ஊர் மக்கள் அனைவரும் அவனை 'நப்பி' என்றும் 'கஞ்சன்' என்றும் கேவலமாக பேசிவந்தனர். அவன் தெருவில் போகும்போது சிறுபிள்ளைகள் மற்றும் பொதுமக்கள் அவனை 'கருமி' என்றும் 'பிசினி' என்றும் 'உலோபி' என்றும் வசை பாடுவது வழக்கம்.

அந்த மனிதன் (உலோபி) காசு-பணத்தை மிகவும் நேசித்ததால் தனது வியாபாரத்தில் கிடைத்த லாபத்தை அனுபவிப்பதைக்காட்டிலும் சேமித்து வைப்பதிலேயே குறியாய் இருந்தான். இவ்வித மாக பணம் சேர்த்து அவன் பெரும் செல்வத்துக்கு அதிபதியாகிவிட்டான். அந்தோ! 'இருப்பது பொய் - இறப்பதே மெய்' என்ற பழமொழிக்கேற்ப அவனும் ஒருநாள் மரணம் அடைந்தான்.

எல்லாரும் எதிர்பார்த்ததுபோல் அவன் பெரும் ஆஸ்தியைச் சேர்த்திருந்தான். ஆனால், யாரும் எதிர்பார்த்திராத ஒரு காரியத்தை அவன் செய்திருந்தான். அது என்ன தெரியுமா? அவன் எழுதிவைத்திருந்த 'உயில்' தான். அந்த உயிலில் அவன், ''எல்லோரும் என்னை கஞ்சன், கருமி என்று கேவலமாக பேசினீர்கள், ஆம்! நான் 'கஞ்சன்தான், ஈயாத -உலோபிதான்' ஆனால் என் செயலுக்கு ஒரு நோக்கம் உண்டு. நம் பட்டணத்தில் மக்கள் தண்ணீருக்காக திண்டாடும் பரிதாப நிலையைக் கண்டு மனம் உடைந்தேன். அதற்கு ஒரு வழி காண நினைத்து, எனது தேவைகளை உதறித்தள்ளி பெரும் ஆஸ்தியைச் சேர்த்தேன். இப்போது எனது சொத்து கள் முழுவதையும் இந்த பட்டணத்தில் குடி-தண்ணீர் வசதி செய்வதற்காக எழுதிவைக்கிறேன்.'' என குறிப்பிட்டிருந்தான்.

ஊர் மக்கள் ''உலோபி'-யின் உயர்வான செயலை எண்ணி வியந்தனர் அவனுக்காக கண்ணீர் விட்டனர். நமக்கு நன்மை செய்வதற்காக பரிகாசம் - அவமானத்தை தாங்கிய இந்த உயர்ந்த உள்ளத்தை நாம் அவமதித்துவிட்டோமே! என அவர்கள் மனம் வருந்தினார்கள்.

பிரியமானவர்களே! நாமும்கூட கடுமையாய் உழைக்கிறோம், பணம் சேர்க்கிறோம், குடும்பத் துக்கு செலவு செய்கிறோம். ஆனால், அந்த உலோபியைப்போல் நம்மையும் நமது தேவைகளையும் மறுத்து பொதுநலனுக்காக செயல்பட்டிருக்கிறோமா? மனுக்குலத்துக்காக நிந்தை, பாடுகளை சகித்த இயேசுவைப் போல், சுயத்தை வெறுத்து, நிந்தை சகிக்க நம்மை அர்ப்பணிப்போம்.

**வதம் இவ்விதமாய்ச் சொல்லுகிறது:உமது நிமித்தம் நிந்தையை சகித்தேன்,**

**இலச்சை என் முகத்தை மூடிற்று. சங் 69:7**

**இயேசுகிறிஸ்து ஐசுவரியமுள்ளவராயிருந்தும், நீங்கள் அவருடைய தரித்திரத்தினாலே**

**ஐசுவரியவான்களாகும்படிக்கு, உங்கள் நிமித்தம் தரித்திரரானாரே. 2கொரி 8:9**

EPISODE 13

# இந்திய கிறிஸ்தவ திருச்சபை வரலாறு

1ம் நூற்றாண்டு முதல் 21ம் நூற்றாண்டு வரை

## இரண்டாயிரம் ஆண்டு வரலாறு..
## இரண்டாம் வருகைக்கு தயாராகு...

கட்டுரை ஆசிரியர்
அறிவர். திருமதி. சலோமி மனோகர்



**இந்திய திருச்சபை சரிதை:**
**(1முதல் 21ம் நூற்றாண்டுவரை)**
**தொகுதி-3 பகுதி-3**

3. ஐரோப்பிய-ஆசிய தொடர்பும் மோதலும் 3. முகலாயர்களின் வருகை

கி.பி. 1526ம் ஆண்டில், மத்திய ஆசியாவிலிருந்து துருக்கிய வீரர்களின் இராணுவம் தங்களைத் தாங்களே ஆப்கானிஸ்தானின் எஜமானர்களாக ஆக்கி, இந்திய சமவெளியில் இறங்கி, நிரந்தர ஆதிக்கத்தை ஸ்தாபித்தார்கள் என்று சொல்ல குறிப்பிட்ட காரணம் எதுவும் இல்லை.

இந்தியாவை ஆக்கிரமித்தவர்களில் பலர் இஸ்லாமியர். அவர்களில் பெரும்பா லானோர் சிறிய அல்லது இடைக்கால ராஜ்ஜியங்களை நிறுவுவதைவிட வேறு எதையும் செய்துவிடவில்லை. தொடர்ந்து மாறிவந்த எல்லைகளால் இந்திய துணைக்கண்டம் முழுவதையும் ஒன்றிணைப்பது சவாலாக இருந்தது. முடிவில் பாபர் காபூல்-ஐ தலைநகராகப்கொண்டு ஆப்கானிஸ்தானில் ஆட்சிசெய்து வெற்றி பெற்றவராக உருவெடுத்தார். சிறு வயதில் இருந்தே அவர் இந்தியாவில் தனது பேரரசை நிறுவவேண்டும் என்ற தீர்மானத்தை உருவாக்கி செயல்பட்டார்.

கி.பி.1524-ல் லாகூரில் பாபரின் முதல் ஆக்கிரமிப்புக்கு இடையில் 6-ஆண்டு காலம் மட்டுமே ஒரு சாம்ராஜ்யத்தை வெல்வதற்காக அவருக்குக் கிடைத்தது. இந்த 6-ஆண்டுகளை பெரும்பாலும் போரிடுவதற்கும் தற்காப்புக்காகவுமே பாபர் செலவிட்டார். பாபர் இந்தியாவை சீரமைக்கவில்லை.

கி.பி.1530-ல் பாபரின் மரணத்திற்குப் பின்னர் அவரது பேரன் அக்பர் அப்பணியை செய்தார். ஆனாலும், பாபரின் சாதனைகள் மறக்கமுடியாதவை. இந்தியாவின் ஒவ்வொரு பகுதியிலும் இஸ்லாமை முக்கிய காரணியாக மாற்றியது பாபர் என்றால் அது மிகையல்ல.

இந்தியாவின் மீது மேற்கு, வடமேற்குத் திசைகளிலிருந்து மஹா. அலெக்ஸாண்டர் காலம் தொடங்கி பல நூற்றாண்டுகளாக பல்வேறு படையெடுப்புகள் நடைபெறுள்ளன. வட இந்தியாவின் பல பகுதிகள் இந்தோ - கிரேக்கர்கள், ஆப்கானியர், சாகர், குஷாணர் போன்ற அந்நியர்களால ஆளப்பட்டுள்ளன. துருக்கிய தைமூர், மங்கோலிய செங்கிஸ்கான், ஆகியோரின் வழித்தோன்றல் களான முகலாயர் இந்தியாவில் ஒரு பேரரசை நிறுவினர். அப்பேரரசு 3-நூற்றாண்டுகளுக்கு மேலாக ஆட்சி செய்தது. ஆனால், அப்போது அவர்கள் அந்நிய ஆட்சியாளர்களாகக் கருதப்படவில்லை. மாறாக இந்திய அரச வம்சாவளியாகவே கருதப்பட்டனர்.

கி.பி.1526-ல் பானிப்பட் போரில் இப்ராகிம் லோடியை பாபர் தோற்கடித்த பின் நிறுவப்பட்ட முகலாயப் பேரரசு கி.பி.1526 தொடங்கி 1857 வரை நீடித்தது. முகலாய வம்சத்தைச் சேர்ந்த ஆறு முக்கிய அரசர்களான பாபர், ஹுமாயூன், அக்பர், ஜஹாங்கீர், ஷாஜஹான், ஔரங்கசீப் ஆகியோர் இந்திய வரலாற்றில் தங்கள் தடங்களைப் பதித்தனர். கி.பி.1707-ல் ஔரங்கசீப்பின் மறைவைத் தொடர்ந்து முகலாயப் பேரரசு வீழ்ச்சியடைந்தது. என்றாலும், கி.பி.1707 முதல் 1857வரை முகலாயர் அரசு பெயரளவுக்கு ஓர் அரசாக இயங்கி வந்தது.

ஒன்றரை நூற்றாண்டுக்குப் பின்னர் கி.பி.1857-ம் ஆண்டு பெரும்கிளர்ச்சிக்குப் பின் அரசியல் அதிகாரம் ஆங்கிலேயரின் கைகளுக்குச் சென்றதுபோது ஆங்கி லேய அரசி ஆட்சி பொறுப்பேற்றார். முகலாயப் பேரரசு அதனுடைய அதிகாரத் தின் உச்சத்தில் ஆப்கானிஸ் தானிலிருந்து வங்காளம் வரையிலும், காஷ்மீர் முதல் தெற்கே தமிழகம் வரையிலும் பரந்து விரிந்திருந்தது. இந்தியா முழுவதிலும் மையப்படுத்தப்பட்ட சீரான நிர்வாக அமைப்பை முகலாயர் உருவாக்கினர்.

ஜஹாங்கிர் முற்றிலும் ஒரு இஸ்லாமிய பாதுஷாவாக மட்டுமே நடந்து கொண்டார். கி.பி.1598ம் வருடம் சர். தாமஸ் ரோய் (Sir. Thomas Roe) இங்கிலாந்தின் தூதுவராக பிரிட் டிஷ் அரசரால் அனுப்பி வைக்கப்பட்டார். மிகுந்த சிரமத்திற்குப் பிறகு ஜஹாங்கிரைச் சந்தித்த தாமஸ் ரோய், முகலாய அரசின் பகுதிகளில் தொழிற்சாலைகளையும், சர்ச்சுகளையும் அமைக்க உரிமை கோரினார். அதேசமயம், லாகூரில் கவர்னராக இருந்த ஜஹாங்கிரின் மூத்த மகனான குஸ்ரூவை தொடர்ந்து சந்தித்த போர்ச்சுக்கீசிய பாதிரிகள் அவரை குடும்பத்துடன் கிறிஸ்தவராக மதம் மாற்றுவதில் வெற்றியடைந்தார்கள்.

ஜஹாங்கிருக்குப் பின்னர் பட்டத்திற்கு வரவேண்டியவரான குஸ்ரூ எதிர்பாராத விதமாக ஜஹாங்கிரை எதிர்த்துப் புரட்சி செய்தார். குஸ்ரூ தனக்கெதிராக புரட்சி செய்வதாகக் கேள்விப்பட்ட ஜஹாங்கிர் தனது படையுடன் வந்து குஸ்ரூவைத் தோற்கடித்துச் சிறைப் பிடித்தார். குஸ்ரூவுக்கு உதவியதாகக் கூறப்பட்ட 700படைத்தலைவர்களும் கைது செய்யப் பட்டார்கள். ஜஹாங்கிர், குஸ்ரூவின் இரண்டு கண்களையும் பழுக்கக் காய்ச்சிய இரும்புக் கம்பியால் சூடுபோட்டுக் குருடாக்கிவிட்டார்.

ஜஹாங்கிர், மரணப்படுக்கையில், தனக்குப் பிறகு குஸ்ரூவின் மகனான தானியேலை பாதுஷாவாக்க வேண்டுகோள் விடுத்தார். அதன்படி ஜஹாங்கிரின் மரணத்திற்குப் பின்னர் தானியேல் பாதுஷாவாக முடிசூட்டப்பட்டார். தானியேல் ஒரு கிறிஸ்தவர். பதவியேற்பதற்கு முன்னால் அவர் மீண்டும் இஸ்லாமிய மதத்திற்குத் திரும்பிவிட்டதாக சொல்லப்படுவது எந்த அளவிற்கு உண்மை என்று தெரியவில்லை. அப்படி அவர் மதம் மாறாமல் இருந்திருந்தால் இந்தியாவை ஆண்ட முதல் கிறிஸ்தவ பாதுஷா தானியேல்தான்.

பின்னர், தானியேலை தோற்கடிக்கும் திட்டத்துடன் ஆக்ரா நகர்நோக்கி படையெடுத்து வந்த ஷாஜஹானை முகலாயப் படைகள் வரவேற்று அவருக்கு உதவிசெய்தன. ஷாஜஹானிடம் புறமுதுகு காட்டி, கட்டிய துணியுடன் தப்பிச்சென்ற தானியேல் இந்தியா வெங்கும் சுற்றித் திரிந்து பின்னர் பாரசீகத்திற்குத் தப்பிச் சென்றார் என்கிறது வரலாறு.

இந்திய கிறிஸ்தவ திருச்சபை வரலாறு தொடரும்...

Author: Dr. Mrs. Salomi Manohar, Asst. Professor Rtd.,
(Pope’s College Sawerpuram), Thiruvanmiyur, Chennai. South India

# ஜெப-ஜன்னல் ஜெபக்குறிப்புகள்

**கர்த்தரை நோக்கி மன்றாடி ஜெபிப்போம் - Come! Let us intercede to God**

1) அகில உலக சமாதானத்துக்காக... உக்ரைன்-ரஷ்யா போர் மற்றும் சூடான்-உள்நாட்டுப் போர் முடிவுக்கு வர... இலங்கை, பாகிஸ்தான், ஆப்கானிஸ்தான் வங்கதேச பொருளாதாரம் சீரடைய... பேரிடர்களிலிருந்து மக்கள் பாதுகாக்கப்பட...

2) இந்திய மக்களின் நல்வாழ்வுக்காக... இந்தியாவில் மதவாதம், வன்முறைவாதம், பிரிவினைவாதம் போன்றவை வேரறுக்கப்பட... பழங்குடி மக்கள் மற்றும் சிறு பான்மை மக்களுக்கு எதிரான வன்முறை-ஒடுக்குதல்கள் நிறுத்தப்பட... இந்திய ஒன்றிய அரசு மக்களை பாரபட்சமின்றி நடத்த... பொருளாதாரம்-விலைவாசி சீரடைய... நீதிமன்றங்களில் நீதியரசர்கள் பாரபட்சமின்றி நீதி வழங்க...

3) தமிழ்நாட்டு மக்களின் நல்வாழ்வுக்காக... மக்கள் இன - மத - மொழி வேறுபா டின்றி அமைதியாக வாழ... தமிழ்நாட்டில் விவசாயம், தொழில்கள், வியாபாரம் சிறக்க... மத-பிரிவினை வாதங்கள், வன்முறைவாதங்கள் கட்டுப்படுத்தப்பட...

4) திருமதி. மெர்லின், திருமதி. பாக்கியா, திருமதி. திலகவதி மகேஷ், திருமதி. வைலட், திருமதி. சுதா, திருமதி. பிரியா சுதிர், திருமதி. புஷ்பாவதி, திருமதி. ஹனா விஜய் ஆகியோருக்கு குழந்தை பாக்கியம் கிடைக்க...

5) நம் பிள்ளைகள் ஜாஸ்மின், வில்சன், DR.கிறிஸ்டினா, கி.ஃப்ட்சன் தங்கராஜ், பிரின்ஸ் ஜேக்கப், ஜெனிபர், சிந்தியா பிரகாஷ், ஜோ.ஃப்னா, ஜாஷ்வா மேத்யூ ஆகியோரின் உயர்-கல்வி படிப்பிற்காக...

6) திரு. செல்வராஜ், திருமதி. சாந்தி அலெக்ஸ், திருமதி. தங்கசெல்வன், திருமதி. அன்னாள் ஜெபக்கனி, திருமதி. பங்கஜம் வில்சன், திரு. வெஸ்லி சாமுவேல், திரு. நெல்சன் (நகோமி), திரு. பால் நந்தகோபால், திருமதி. சுந்தரிபாய், திரு. அப்பன் டேவிட், திருமதி. ஜரீன் வாக்கர், திருமதி. ஃபிளாரன்ஸ் ராஜமணி, திரு. பிலிப், திருமதி. ஞானரத்தினபாய் ஆகியோரின் சரீர சுகத்திற்காக...

7) திருமதி. ராஜேஷ்வரி, DR.ஷீபா, திருமதி. ஐலீன் செல்லத்துரை, திருமதி. ரத்னாபாய் சாம், திருமதி. விமலா டேவிட், திருமதி. மேரி கிரேஸ், திருமதி. மகிமா சந்திரன், திரு. பி.ஹெச். ஜெயச்சந்திரன், திருமதி. வசந்தா அன்பன், திரு. டி. மனோகர், திருமதி. சுகிர்தா சின்னதுரை, திருமதி. சார்லெட் டேவிட், திருமதி. ஜெஸி ஜெயக்குமார் ஆகியோரின் குடும்ப ஆசீர்வாதங்களுக்காக...

8) நமது ஊழிய ஆதரவாளர்களான திருமதி. மியூரியல் புஷ்பராஜ், திருமதி. ஜெயக்குமாரி, திரு.ஜே.ஆர். டேவிட், திருமதி. வினோலியா வில்சன், திரு. எமர்சன் ஆண்ட்ரூஸ், திருமதி. கஸ்தூரி எலியாஸ், திருமதி. சார்லட் டேவிட், திருமதி. ஷீலா சாமுவேல், திரு. நிக்ஸன் எவர்பிரைட், செல்வி. ஷைனி, திருமதி. அரோமா சாத்ராக், திரு. சாம்சன் ஆபிர காம், திரு. எஸ்.ஜே.பி. ராஜா, திரு. அசரியா ஞானதாஸ், திருமதி. நிறைமதி ஜாண்ஸன் திருமதி. வனஜா ஹெர்பர்ட் ஆகியோரது குடும்பங்களுக்காக...

9) திருமதி. ஃபிரீடா தங்கதுரை அவர்களின் சுகபிரசவத்துக்காக...

10) உயர்-கல்வி படிப்புக்கு முயற்சி செய்யும் நம் பிள்ளைகளுக்கு கவுண்செலிங் மற்றும் நுழைவுத்தேர்வில் விரும்பிய படிப்பில்-கல்லூரியில் இடம் கிடைக்க...

# வேதாகம போட்டி-153 (ஓசியா)
## சரியான விடைகள்

1. தனக்குத்தானே ஓசி:-10:1
2. சமாரியா ஓசி:-13:16
3. கீலேயாத் ஓசி:-6:8
4. கர்த்தரைத் தேட ஓசி:-10:12
5. இஸ்ரவேல் புத்திரருக்கு ஓசி:-1:10
6. ஓசியா ஓசி:-1:1
7. இஸ்ரவேல் (யாக்கோபு) ஓசி:-12:12
8. கோவில்களை ஓசி:-8:14
9. தவறு ஓசி:-12:1
10. சரி ஓசி:-2:22
11. சரி ஓசி:-4:11
12. சரி ஓசி:-9:11
13. அ - எல்லைகளை ஓசி:-5:10
14. ஆ - எப்பிராயீம் ஓசி:-14:8
15. இ - நன்மையை ஓசி:-8:3
16. ஈ - யாக்கோபு ஓசி:-12:3
17. கோமேர் ஓசி:-1:3
18. எப்பிராயீம் ஓசி:-7:11
19. எப்ராயீம்-யூதா-பக்தி,புகை ஓசி:-6:4,13:3
20. இஸ்ரவேல் ஓசி:-4:15, 16

## CONTACT DETAILS AND BANK DETAILS OF OUR MINISTRIES

**CONTACT DETAILS OF OUR MINISTRIES:**

**CALL:** 9962924900/9789914464.

**WHATSAPP:** 9789914463/7871676100

**E-MAIL:** ratchippu@hotmail.com/ sjddharmaraja@gmail.com

**POSTALADDRESS:** REV. S.J.D. DHARMARAJA, MISSION DIRECTOR, NO: 4/2-A, BARATHI ST., GANDHI NAGAR, SALIGRAMAM, CHENNAI - 93.

**WEBSITE ADDRESS:** www.ratchippu.in/ratchippu.in

**BANK DETAILS FOR SENDING OFFERTORY**

**NAME:** DHARMARAJA SJD.

**S.B.ACCOUNT NO:** 601071548.

**BANK:** INDIAN BANK,

**BRANCH:** NESAPAKKAM BRANCH

**IFSC CODE:** IDIB000N122.

**BANK ADDRESS:** K.K.NAGAR, CHENNAI-78.

**GOOGLE PAY (G-PAY) NAME AND NO.:** REV. DHARMARAJA SJD: 9789914463

# சுதந்திர தினம் 2023

இரட்சிப்பு பத்திரிக்கையின் அன்பான வாசகர்கள், ஆதரவாளர்கள், படைப்பாளர்கள், அலுவலகப் பணியாளர்கள், வலை தளப் பணியாளர்கள், கைபிரதி களப்பணியாளர்கள், திருச்சபை இறைமக்கள், தபால்-துறை மற்றும் அச்சகத்து நண்பர்கள் ஆகிய உங்கள் அனைவருக்கும்

எங்களது உள்ளம் கனிந்த

சுதந்திர தினம்-2023

நல்வாழ்த்துக்கள்.

இரட்சிப்பு
ஊழிய-குடும்பத்தார்



Ratchippu Tamil Monthly. Registered News Paper.
Date of Publication: First week of every month
RNI Regn. No.: TNTAM/2012/48197. Postal Regn. (RNP) No.: TN/CC (S) DN/468/22-24.
Licensed to post without prepayment under WPP No.: TN/PMG(CCR)WPP-583/22-24.
The due date for Posting: 8th, 9th & 10th of every month. Posted on: 10th August 2023.
Posted at: RMS Patrika Channel Window, Egmore, Chennai-600 008.

# செய்தித்துளிகள்

1. ‘சார்லஸ்’ மன்னரானதைத் தொடர்ந்து, இங்கிலாந்தின் தேசீய-கீதம், கரன்சி, பாஸ்போர்ட் ஆகியவை, ‘அவரது-மாட்சி 3ம் சார்லஸ்’ என்ற பெயரில் வெளியீடு. ‘அவளது-மாட்சி 2ம் எலிசபெத்’ எனறு முன்பு இருந்தது மாற்றப் பட்டது குறிப்பிடத்தக்கது.

2. சிரியாவின் புதிய இந்திய தூதராக டாக்டர். இர்ஷாத் அகமது நியமனம். தற்போது மஸ்கட்-இந்திய தூதரகத் தில் ஆலோசகராக உள்ள டாக்டர். இர்ஷாத், விரைவில் சிரிய-தூதராக பணியேற்பார் என இந்தியா அறிவிப்பு.

3. போதுமான அளவில் ஆசிரியர்கள், நூலகங்கள், ஆய்வகங்கள், இல்லாத 80-பொறியியல் கல்லூரிகளை ஆய்வு செய்து அவற்றின் தொடர்-அங்கீகாரத்தை நிறுத்தி வைத்தது அண்ணா பல்கலைக்கழகம்.

4. மின்னணு-பொருள் ஏற்றுமதியில் இந்தியாவில் முதல் இடத்தில் உள்ள தமிழ்நாடு, இந்தியாவின் ஒட்டுமொத்த ஏற்றுமதியிலும் 9சதவீத பங்களிப்புடன் முதலிடம் பிடித் தது என நிதி ஆயோக் அறிக்கையில் தகவல்.

5. இந்தியா, பாகிஸ்தான், சீனா, ஜப்பான் உட்பட 6-அணி கள் மோதும் 7-வது சாம்பியன்ஸ்-டிரோபி ஆக்கி போட்டி சென்னை-எழும்பூர், மேயர்.ராதாகிருஷ்ணன் ஸ்டேடியத் தில் இம்மாதம் 3முதல் 12ம் தேதிவரை நடைபெறுகிறது.

Posted on: 10 August 2023

To

If undelivered Please return to:

**REV.S.J.D. DHARMARAJA**
MISSION DIRECTOR
RATCHIPPU TAMIL MONTHLY,
NO: 4/2-A, BHARATHI STREET,
GANDHI NAGAR, SALIGRAMAM,
CHENNAI -93 TAMIL NADU, SOUTH INDIA

Owned & Published by: S.J.D. Dharmaraja. Published from No:6-A, Ambedkar St., Gandhinagar, Saligramam, Chennai-93. Printed by: S.Isaac Prince at Sams Graphics, No: 1, 12th Avenue, Ashok Nagar, Chennai - 600 083. Editor: M. Azariah Gnanadoss.